**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
***ஒ.எஸ்.143/2015***
**2025-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ம் நாள் செவ்வாய்கிழமை**

**வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: கண்ணன்** | **சாதி** | **:** |
| **த-பெ** | **:** | **சமயம்** | **:** |
| **கிராமம்** | **:** | **தொழில்** | **:** |
| **வட்டம்** | **:** | **வயது** | **:** |

**வா.சா. 1 கண்ணன் ஆஜர்.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் எங்களுக்கு சேர வேண்டிய சொத்தை தரச்சொல்லி வழக்கு தாக்கல் செய்தோம். வேறு ஏதும் பரிகாரம் கேட்கவில்லை. என்னை பசியாபுரத்து கண்ணன் என்று சொன்னால் தான் பிரபலமாக தெரியும் என்று சொன்னால் சரிதான். நீங்கள் திருப்புவனம் தாலுகாவில், பசியாபுரத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். 30 வருடமாக பசியாபுரத்தில் குடியிருந்து வருகிறேன்.

தாவா குருந்தன்குளம் கிராமத்தை விட்டு நான் போய் சுமார் 25-30 வருடங்கள் இருக்கும். பிராது மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை யார் சொன்னது என்றால் எனது அப்பா வெள்ளைச்சாமி சொல்லி எனக்கு தெரியும். முருகனுக்கு சிவராமன் பத்திரம் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை என்று நான் சொல்கிறேன். வா.சா.ஆ.2ல் உள்ள புகைப்படத்தில் உள்ள நபர் சிவராமன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியும்.

வா.சா.ஆ.2ல் புகைப்படத்தில் கண்டுள்ள சிவராமன் இறந்துவிட்டார். அவர் இறந்து சுமார் 10 வருடங்களுக்கு மேலாகிறது. மேற்படி சிவராமனுக்கு வாரிசுகள்

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.08 11:08:00 +0530

உள்ளார்களா என்றால் இருக்கிறார்கள். அவருடைய பெயர் தெரியுமா என்றால் எல்லா பெயரும் தெரியும். 1வது வாரிசு மலைப்பாண்டி, 2வது வாரிசு பெரியண்ணன் (எ) சீனி, 3வது வாரிசு பாலகிருஷ்ணன், 4வது வாரிசு- சரவணன், 5வது வாரிசு- முருகன் ஆகியோர்கள் ஆகும். 1வது வாரிசு மலைப்பாண்டி இறந்துவிட்டார். அவருக்கு வாரிசுகள் உள்ளார்கள். வாரிசு மனைவி உள்ளார் ஒரு ஆண் மகனும், பெண் மகளும் வாரிசுகள் உள்ளனர். 2வது வாரிசு பெரியண்ணன் என்கிற பெயர் அதிகார பூர்வ பெயர் என்றும். சீனி என்ற துணைப்பெயர் அவருக்கில்லை என்று சொன்னால் அவ்வாறு தான் கூப்பிடுகிறார்கள்.

சிவராமன் எழுதிக்கொடுத்த தாவா செட்டில்மெண்ட் பத்திரத்தை நான் செல்லாது பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதில் அவர் இறந்துவிட்டபடியால் அவருடைய வாரிசுகளை சேர்த்து வியாஜ்ஜியம் நடத்ததால் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. பிராதில் தாவா 1 முதல் 3 லக்க சொத்துக்களில் பாதி சொத்துக்கள் எங்களுக்கு பாத்தியம் என்று பரிகாரம் கோரப்பட்டுள்ளதில் எந்த பக்கம் பாதி என்ற பிராதில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

வா.சா.ஆ.9 யை காட்டி கேள்விக்கேட்கப்பட்டது. வா.சா.ஆ.9 பதிவு செய்யப்படாத பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ.9 பத்திரத்தில் 1ம் பிரதிவாதி முருகன் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் செய்யவில்லை. அவர் அப்போது சிறுவயதாக இருந்தார். அவருக்கு 4 அல்லது 5 வயது இருக்கும். வா.சா.ஆ.9 ஆவணத்தின் மூலம் உரிமை கோரி தான் நாங்கள் இந்த தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.9 ஆவணத்தில் 2வது பார்ட்டியான கண்டுள்ள நபர்களில் 4வது நபராக காட்டப்பட்டுள்ள முருகேசன் கையெழுத்து எதுவும் செய்துள்ளாரா என்றால் கையெழுத்து எதுவும் செய்யவில்லை அவர் மேஜர் ஆகாததால் கையெழுத்து

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.08 11:08:07 +0530

போடப்படவில்லை. இந்த ஆவணத்தில் 4வது நபர் முருகேசனை மைனர் என்று காட்டப்பட்டுள்ளதா என்றால் பத்திரத்தில் காட்டப்படவில்லை, ஆனால் அவர் மைனர். வா.சா.ஆ.9 ஆவணத்தை மைனராக உள்ள நபரை காட்டி எழுதப்பட்டிருப்பதாக சொல்வது சட்டப்படி ஏற்புடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.9 பத்திரத்தில் பெரியண்ணன், சரவணன், பாலகிருஷ்ணன், முருகன் ஆகியோர்களை பற்றி காட்டப்படவில்லை என்றால் நானும், மலைப்பாண்டி என்பவரும் தான் மேஜர். மற்றவர்கள் அனைவரும் மைனர்களா் ஆவார்கள். வா.சா.ஆ.9 ஆவணம் எத்தனை இலக்க சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியும். வா.சா.ஆ.9 ஆவணத்தில் 6 இலக்க சொத்துக்கள் புஞ்சையுடன் சேர்த்து காட்டப்பட்டுள்ளது.

வா.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் பத்திரம் எழுதப்பட்ட காலத்தில் ரூ.100க்கு மேல் மதிப்பு இருக்கும் என்றால் சரிதான். நீங்கள் இடம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறீர்களா என்றால் இல்லை நான் ஒரு கம்பெனியில் பணிபுரிந்து வந்தேன். கம்பெனியில் வேலை பார்த்து விசயத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் பிராது கொடுத்த சமயம் விவசாயம் செய்து வந்தேன், தற்போது தான் கம்பெனியில் வேலைக்கு சேர்ந்துள்ளேன். நான் பசியாபுரத்தில் இடம் வாங்கி வீடு கட்டியுள்ளேன். பதிந்து இடம் வாங்கினீர்களா, பதியாமல் இடம் வாங்கினீர்களா என்றால் பதியாமல் இடம் வாங்கினேன், விசயம் தெரியாது அதன் பிறகு தற்போது பதிவு செய்துள்ளேன்.

வா.சா.ஆ.9 ஆவணத்தில் கண்டுள்ள வெள்ளைச்சாமிக்கு தமிழ்ச்செல்வி என்ற மகள் இருந்து இறந்துவிட்டார் என்றால் சரிதான். தமிழ்ச்செல்வி என்பவரை பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லை என்றால்

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.08 11:08:13 +0530

முன்பே அவர் இறந்துவிட்டதால் சொல்லப்படவில்லை. வேண்டுமென்றே தமிழ்ச்செல்வியை மறைத்துவிட்டீர்கள் என்றால் அவர் இறந்துவிட்டதால் சொல்லவில்லை. பிராதிலும், நிரூபணவாக்குமூலத்திலும் தாவா சொத்து ஆதியில் வெள்ளைச்சாமிக்கு பாத்தியம் என்று சொல்லியுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அப்போது சொத்து பிரிக்கவில்லை மொத்த சொத்தாக இருந்ததால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து ஆதியில் வெள்ளைச்சாமிக்கு பாத்தியம் என்று ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

வெள்ளைச்சாமிக்கு வாரிசுகள் சிவராமன்-1, வெள்ளைச்சாமி-2 என்பதற்கு வாரிசுகள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அந்த சமயத்தில் வாரிசுசான்றிதழ் வாங்கியுள்ளோம் அது எங்கு உள்ளது தெரியாது என்பதால் தாக்கல் செய்யவில்லை. அப்படி ஒரு ஆவணம் கிடையாது என்றும், வழக்கிற்காக பின்யோசனையின் பேரில் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணம் சட்டப்படி பதிவு செய்யப்படாததால் செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரம் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் காட்டப்படவில்லை, நாங்கள் சொத்தை பிரித்து கொண்டதற்கான ஒரு அத்தாட்சி ஆகும். வா.சா.ஆ.9ல் சொத்து முழுவதும் காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1யை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. முருகன் தற்போது எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி முருகனை பற்றிய விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி முருகன் வேலைநிமித்தமாக வெளியூரில் உள்ளார் என்றும், இந்த விவரம் உங்களுக்கு தெரிந்துகொண்டே தாவா குருந்தன்குளம் முகவரிக்கு வா.சா.ஆ.4 அனுப்பியுள்ளீர்கள் என்றும் அதனால் தான் வா.சா.ஆ.6 Left

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.08 11:08:20 +0530

என்று திரும்ப வந்துள்ளது என்றால் சரியல்ல. முதலில் அவர் குருந்தன்குளத்தில் இருந்தார் அதனால் அங்கு அனுப்பினேன், தற்போது எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் ஏதோ சிவராமன் வெள்ளைச்சாமிக்கு சேர வேண்டிய தாவா சொத்துக்களில் பாதி பாகத்தை மோசம் செய்யும் விதத்தில் பட்டாவை மாற்றிக்கொண்டுள்ளார் என்று சொல்லியிருப்பதற்கு எந்த வருடம் மாற்றப்பட்டது என்றால் 2014, 2015ல் மாற்றப்பட்டது. அப்படி எதுவும் நடக்கவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தாவா சொத்துக்களில் எங்கள் பாகத்தை மோசம் செய்யும் விதமாக சிவராமன் பட்டா அவர் பெயரிலிருந்து மாற்றி கொண்டுள்ளதாக தாங்கள் சொல்லியிருப்பதில் எந்த தேதியில் அது நடைபெற்றது என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்துக்களுக்கும் வாதிகளாகிய எங்களுக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி முருகனின் அப்பா சிவராமன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எல்லாமே 1ம் பிரதிவாதி முருகனின் அப்பா சிவராமனின் தனிப்பட்ட சொத்துக்கள் என்றும், அவர்களுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் சொன்னால் சரியல்ல. அவை எங்கள் தாத்தா வெள்ளைச்சாமியின் பூர்வீக சொத்துக்களாகும். தாவா சொத்துக்கள் என் தாத்தா வெள்ளைச்சாமியின் பூர்வீக சொத்துக்கள் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் நாங்கள் எதுவும் தாக்கல்செய்யவில்லை.

தாவா சொத்துக்கள் அனைத்தும் நான் சொல்லும் வெள்ளைச்சாமியின் பூர்வீக சொத்துக்கள் கிடையாது என்றும், அதனால் தான் நாங்கள்

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.08 11:08:26 +0530

ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் சிவராமன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்பதற்கு சிவராமன் பெயரில் அரசாங்கம் வழங்கிய நிலஉடமை குறிப்பேடு அசல் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நிலஉடமை குறிப்பேடு காலத்திலேயே தாவா சொத்துக்கள் எல்லாமே 1ம் பிரதிவாதியின் அப்பா சிவராமனுக்கு தனித்து பாத்தியப்ட்ட சொத்துக்கள் என்றும்அவர் அனுபவம் செய்து வந்தார் என்றும் அதனால் தான் அரசாங்கத்தில் பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதியின் தந்தை சிவராமன் தாவா சொத்துக்களை தனித்த பாத்தியத்திலும், அனுபவத்திலும் வைத்து அனுபவம் செய்து வந்தார் என்றும், கடந்த 18.12.2006ம் தேதியிட்ட பதிவு செய்யபட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி 1ம் பிரதிவாதியின் பேரில் உள்ள அன்பினாலும், அபிமானத்தினாலும் தாவா சொத்துக்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படுத்தி கொடுத்துவிட்டார் என்றும், அது முதல் 1ம் பிரதிவாதியே தாவா சொத்துக்களையும், செட்டில்மெண்டில்கண்ட அனைத்து சொத்துக்களையும், இந்த செட்டில்மெண்ட் பத்திரத்தையும் ஒப்புக்கொண்டு அதில் கண்டுள்ள சொத்துக்களை தனித்த சுவாதீனத்தில் தனித்த நிலையில் அனுபவம் செய்து வருகிறார் என்றும், தாவா சொத்துக்கள் உள்ளிட்ட மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களையும், 2ம் பிரதிவாதி பாரத ஸ்டேட் வங்கி, மானாமதுரைக்கு 27.02.2007ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட Deposit of title deeds எழுதிக்கொடுத்து தாவா சொத்துக்கள் உள்ளிட்ட சொத்துக்களை 2ம் பிரதிவாதியிடம் அடமானம் வைத்து கடன் வாங்கி அந்த கடனையும் திருப்பி செலுத்தி சொத்துக்களை அவர் இஷ்டப்படி அனுபவம் செய்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல.

தாவா சொத்துக்கள் மதிப்பிடக்கூடிய சொத்துக்கள் என்றால் சரிதான். 1வது இலக்க சொத்து எவ்வளவு மதிப்புபோகும் என்றால் எனக்கு தெரியாது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.08 11:08:33 +0530

2வது இலக்க சொத்து எவ்வளவு மதிப்பு போகும் என்றால் இப்ப உள்ள அரசாங்க மதிப்பு எவ்வளவு போகும் என்று எனக்கு தெரியாது. 3வது இலக்க சொத்து 3 செண்டு எவ்வளவு மதிப்பு போகும் என்றால் இப்ப உள்ள மதிப்பு கூட்டியுள்ளார்கள் எவ்வளவு மதிப்பு பெறும் என்று எனக்கு தெரியாது.

தாவா சொத்துக்களின் நான்குமால் தெரியாது. தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியும் இப்போது எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்துக்கள் ஆதியில் சிவராமனுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்துக்கள் அதை அவர் 1ம் பிரதிவாதிக்கு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக எழுதிக்கொடுத்து 1ம் பிரதிவாதி தான் தாவா சொத்தை தனித்து அனுபவம் செய்து வருகிறார் உங்களுக்கு அதில் எந்த பாகமும் இல்லை என்றும், நீங்கள் கோரும் பரிகாரம் உங்களுக்கு சட்டப்படி கிடைக்கக்கூடியதில்லை என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

S MOHAMED YOUSUF NAVAZ

Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.04.08 11:08:39 +0530

**District Munsif,**
**Manamadurai.**